20th July 1964]

(இ) ஆமெனில், இத்திட்டத்தை ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க உத்தேசமுண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. இரா. நாராயணன் : தலைவர் அவர்களே, இந்தக் குடி தண்ணீர் வசதி அந்தப் பகுதியிலே இல்லாத காரணத்தினால் நரம்புச் சிலந்தி என்ற வியாதி ஏற்பட்டு அதிகக் கஷ்டமாக இருக்கிறது. அதை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்ப்பதற்குத் தவறி விட்ட காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கலாமா வேண்டாமா என்பதைப் பற்றி டெவலப்மெண்ட் கவுன்சில் மூலமாகச் சிபாரிசு செய்து அனுப்பியிருந்தார்கள். ஏற்கெனவே பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர்த் திட்டம் ஸாங்ஷன் ஆன இடங்களில் கூட தற்போது அவைகள் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. செந்துறை பஞ்சாயத்தைப் பொறுத்த வரையில் திருச்சி கலெக்டருக்கு அரசாங்கம் எழுதி அவர்களுடைய ரிப்போர்ட்டை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அவரும் பப்ளிக் ஹெல்த் என்ஜினியரோடு கலந்து பேசிய பிறகு எஸ்டிமேட் அனுப்புவதாகக் கூறியிருக்கிறார். எஸ்டிமேட்டைப் பார்க்கும்போது அதை உடனடியாக எடுத்துச் செய்வதற்கு இயலாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிற்பேட்டை

*565 கேள்வி.—திரு. வி. ஆர். பெரியண்ணன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சேலத்தில் தொழிற்பேட்டை ஒன்றை நிறுவும் திட்டம் இப்போது எந்த நிலையில் உள்ளது ?

THE HON. SRI R. VENKATARAMAN : A total extent of 26.56 acres of land in Narasojipatti and Reddiyur villages required for establishing the Industrial Colony at Salem has been notified under the Land Acquisition Act. But possession of 19.72 acres of lands has not been taken by the Government as the owners of the lands have filed writ petitions in the High Court challenging the validity of the acquisition proceedings taken by Government.

திரு. எம். வி. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, அந்த இடத்திலே அந்த அக்விஸிஷன் ப்ரொஸீடிங்சை ஆட்சேபித்து ரிட் மனு தாக்கல் செய்திருப்பதாகச் சொன்னார்கள். வேறு இடத்தில் இதை அமைக்க வேறு இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கே அமைப்பதற்கு வேலையை துரிதப்படுத்துவார்களா ?

கனம் சபாநாயகர் : அங்கும் ரிட் போட்டால் என்ன செய்வது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் சொல்வதற்கு முன்னதாகவே கனம் சபாநாயகர் முந்திக்கொண்டு விட்டார்கள். அங்கே அப்படித்தான் ஆயிற்று. முதலில் ஒரு இடம் பார்த்தோம். அது கிடைக்காமல் போயிற்று. பிறகு வேறு ஒரு இடம் பார்த்தோம். அதுவும் கிடைக்காமல் போயிற்று. இப்போது பார்த்திருப்பது மூன்ருவது இடம். இதுவும் கிடைக்காவிட்டால் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் அந்த ஊருக்கு வராமல் போகலாம். அவ்வளவுதான் என்னுல் சொல்ல முடியும.

*566 கேள்வி.—திரு. சி. சிவசுப்ரமணியன் : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென்னுற்காடு ஜில்லா, சிதம்பரத்தில் ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No.

மின்சார உற்பத்தி

*567 கேள்வி.—திரு. மா. இராசாங்கம்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை மாவட்டத்திலுள்ள சுருளி ஆற்றிலிருந்து மின்சாரம் எடுப்பதான திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சுருளி ஆற்று நீரைப் பயன் படுத்தி 25 மெகவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அணைக்கட்டு கட்டுவதற்கு உரிய இடங்கள் முதலியவை குறித்துப் பரிசீலனைகள் நடந்து வருகின்றன.

அரிசன நலக் கமிட்டிகள்

*568 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 17-ம் தேதி நட்சத்திரக் குறியிடாத 32-ம் என் கேள்விக்கு அளித்த பதிலேயொட்டி மாவட்ட அரிசன நலக் கமிட்டிகளில் முன்னுள் எம்.எல்.ஏ.-க்கள் அங்கம் வகிக்கிறுர்களே ஒழிய தற்போதைய எம்.எல்.ஏ.-க்கள் சேர்க்கப்படவில்லை என்பதற்குக் காரணமென்ன ?

(இ) அவர்களையும் இக்கமிட்டியில் நியமிக்க உத்தேச முண்டா ?

(உ) சென்னை மாநகரில் இப்படியொரு கமிட்டி அமைக்கப் படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) மாவட்ட ஹரிஜன நலக் குழுக் களில் சாதாரணமாக 10 அரசாங்க அதிகாரிகளும் அதிகாரச் சார் பற்ற பத்து பேரும் உறுப்பினர்களாக இருப்பர். சில இடங்களில்